**சார்பு நீதிமன்றம், இலால்குடி.**

நாள்: 23.03.2021 செவ்வாய் கிழமை

OS.No.227/2018 DW2: பரமசிவம்

**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கிற்காக சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. என்னுடைய வீட்டின் நத்தம் சர்வே எண் எனக்கு தெரியாது. எனது வீட்டிற்கு பட்டா வழங்கியுள்ளார்கள். பிரதிவாதிகளின் தகப்பனார் அருணாச்சலம் தற்போது அவர்கள் இருக்கும் இடத்தை கிரயம் பெற்றார் என்பதை குறிப்பிடும் வகையில் நான் அந்த ஆவணங்கள் எதையும் பார்க்கவில்லை. அருணாச்சலம் கிரயம் பெற்ற சொத்து தென்வடல் அளவு சுமார் 170 அடிக்கு மேல் இருக்கும். கிழமேல் அளவு 30 அடி என்று நான் கூறுவது மேலோட்டமாகத்தான். எனக்கு பட்டா வழங்கியதுபோல் அருணாச்சலம் கிரயம் பெற்ற சொத்துக்கு பிரதிவாதிகளுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. தாவா சொத்திற்குரிய சர்வே எண் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண் மற்றும் அதன் உட்பிரிவு என்ன என்று பிரதிவாதிகளிடம் நான் கேட்கவில்லை. வாதி மற்றும் பிரதிவாதிகள் சொத்துக்கு பாதையானது தெற்கு பக்கமும் வடக்கு பக்கமும் உள்ளது. பிரதான வாசல் தெற்கு பக்கம் உள்ளது. தாவா சொத்தில் பிரதிவாதிகள் சுவாதீனத்தில் இருந்து வருவதாக கூறுவதற்கு வருவாய் ஆவணங்கள் எதையும் நான் பார்த்ததில்லை. பனையடியானுக்கு சிதம்பரம் மற்றும் கனகராஜ் ஆகிய சகோதரர்கள் உள்ளனர். வாதி சுப்பிரமணியன் வீட்டிற்கு கீழ்புறம் தான் பனையடியான் குடியிருந்து வருகிறார். அருணாச்சலம் தாவா சொத்தை அவருடைய மகன்களுக்கு பாத்தியப்படுத்தி பத்திரம் எதுவும் எழுதிவைத்துள்ளாரா என்று எனக்கு தெரியாது. கனகராஜிக்கு அருணாச்சலம் சொத்தில் பாத்தியதை இருக்கிறதா என்று எனக்கு தெரியாது. பனையடியான் எனக்கு சிறுவயது முதலே பழக்கம். எனது தகப்பனார் அண்ணாமலை முத்துராஜா இறந்துவிட்டார். பனையடியான் எனக்கு நல்ல பழக்கம் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பனையடியான் வீட்டிற்கு பின்புறம் வீடு கட்டும் அளவிற்கு கனகராஜிக்கு நிலம் உள்ளதா என்று எனக்கு தெரியாது. பனையடியான் வீட்டின் தென்வடல் அளவு 27 மீட்டர் உடன் முடிந்துவிடுகிறது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து

வாதி சுப்பிரமணியத்திற்கு தான் பாத்தியப்பட்டது என்று சொன்னாலும் அது தெரியாமல் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.